## December 10, 2025 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. இந்தியாவில் செயற்கை நுண்ணறிவுத் துறையில் அமெரிக்காவின் மைக்ரோசாஃப்ட் நிறுவனம் ரூ.1.58 லட்சம் கோடி முதலீடு செய்ய முடிவு செய்துள்ளதாக அந்த நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி சத்யா நாதெள்ளா அறிவித்துள்ளார்.
   i. இதன்மூலம் ஆசிய கண்டத்தில் மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தின் மிகப்பெரிய முதலீடு இந்தியாவில் மேற்கொள்ளப்படுகிறது. எதிர்காலத்தில் செயற்கை நுண்ணறிவுத் துறையின் மிக முக்கிய மையமாக இந்தியா உருவெடுக்கவும் இது உதவும்.
   ii. அமெரிக்க நிறுவனங்கள் உள்நாட் டில்தான் அதிகமுதலீடு செய்ய வேண்டும் என்று அதிபர் டொனால்ட் டிரம்ப் தொடர்ந்து வலியுறுத்திவரும் நிலையில், மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தின் இந்த முடிவு முக்கியத்துவம் பெற்றுள்ளது.
   iii. மைக்ரோசாஃப்ட் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் அடுத்த 4 ஆண்டுகளில் (2026-2029) இந்தியாவில் ரூ.1.58 லட்சம் கோடி முதலீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் அனைத்துத் தரப்பு மக்களிடமும் செயற்கை நுண்ணறிவு எடுத்துச் செல்லப்படும். இந்தியாவில் முதலீடு செய்வது குறித்து இந்த ஆண்டு தொடக்கத்திலேயே மைக்ரோசாஃப்ட் உறுதிபூண்டிருந்தது என்று கூறப்பட்டுள்ளது.
   iv. கூகுள், அமேசான் ஆகிய அமெரிக்க நிறுவனங்களும் ஏற்கெனவே இந்தியாவில் பலகோடி மதிப்பிலான தொழில்நுட்ப முதலீட்டுத் திட்டங்களை அறிவித்துள்ளன.
2. சிறுவர்கள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்த உலகிலேயே முதல்முறையாக ஆஸ்திரேலியாவில் விதிக்கப்பட்ட தடை அதிகாலை (இந்திய நேரப்படி செவ்வாய்க்கிழமை நண்பகல்) அமலுக்கு வந்துள்ளது.
   i. அந்தச் சட்டத்தின் கீழ், 16 வயதுக்கு கீழ் உள்ள சிறுவர்கள் ஃபேஸ்புக், இன்ஸ்டாகிராம், டிக்டாக், யூ-டியூப், ஸ்னாப்சாட், எக்ஸ், ரெடிட், ட்விட்ச், கிக், த்ரெட்ஸ் போன்ற 10 சமூக ஊடகத் தளங்களில் கணக்கு உருவாக்கவோ, வைத்திருக்கவோ தடை செய்யப்பட்டுள்ளது. இதை மீறினால், தொடர்புடைய தள நிறுவனங்களுக்கு 4.95 கோடி ஆஸ்திரேலிய டாலர் (சுமார் ரூ. 296 கோடி) அபராதம் விதிக்கப்படும் என்று அரசு தெரிவித்துள்ளது.
3. தங்கள் நாட்டில் வான்வழித் தாக்குதல் நடத்திய தாய்லாந்துக்கு எதிராக கடுமையாகப் போரிடத் தயார் என்று கம்போடிய அதிபர் ஹன் மானெட் சூளுரைத்துள்ளார். புதிய எல்லை மோதல்களால் இரு நாடுகளுக்கும் இடையே பதற்றம் அதிகரித்துள்ள நிலையில், அதிபர் மானெட் இவ்வாறு கூறியுள்ளார்.
   i. 1904, 1907-ஆம் ஆண்டுகளில் தாய்லாந்துக்கும் கம்போடியாவுக்கும் இடையே எல்லை வகுக்கப்பட்டது. இருந்தாலும், 11- ஆம் நூற்றாண்டு ஹிந்து கோயில் அமைந்துள்ள ப்ரே விஹேர் பகுதியை மையமாகக் கொண்டு இரு நாடுகளுக்கும் இடையே எல்லைப் பிரச்னை நீடித்து வருகிறது. அந்தக் கோயில் கம்போடியாவுக்குத் தான் சொந்தம் என்று ஐ.நா. உச்ச நீதிமன்றம் கடந்த 2008-இல் தீர்ப்பளித்தது. இருந்தாலும், இரு நாடுகளுக்கும் இடையே எல்லைப் பிரச்னை காரணமாக அவ்வப்போது மோதல் ஏற்பட்டுவந்தது இந்தச் சூழலில், தாய்லாந்து-கம்போடியா இடையே கடந்த ஜூலை மாதம் 5 நாள்களுக்கு நீடித்த போரில் 48 பேர் கொல்லப்பட்டனர்; 3 லட்சம் பேர் அகதிகளாக்கப்பட்டனர்.
   ii. அதையடுத்து, டிரம்ப் முன்னிலையில் தாய்லாந்துக்கும் கம்போடியாவுக்கும் இடையே மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் கடந்த அக்டோபர் 26-ஆம் தேதி போர் நிறுத்த ஒப்பந்தம் கையொப்பமானது. மலேசியா பிரதமர் அன்வர்

இப்ராஹிமின் முன்முயற்சியில் உருவான இந்த ஒப்பந்தம், தாய்லாந்துக்கும் கம்போடியாவுக்கும் இடையிலான எல்லை சர்ச்சையை தீர்க்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

iii. ஆனால், கம்போடியா புதைத்துவைத்திருந்த கண்ணிவெடியில் சிக்கி தங்கள் நாட்டு வீரர் காயமடைந்ததாகக் குற்றஞ்சாட்டிய தாய்லாந்து, போர் நிறுத்த ஒப்பந்தத்தை நவம்பர் 10-ஆம் தேதி ரத்து செய்தது. கம்போடியாவோ, அது ஏற்கெனவே இருந்த பழைய கண்ணி வெடி என விளக்கமளித்தது.

4. காஸாவில் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின் போர் நிறுத்த ஒப்பந்த திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'மஞ்சள் கோடு' தான் இஸ்ரேலுக்கும் காஸாவுக்கும் இடையிலான புதிய எல்லையாக இருக்கும் என்று இஸ்ரேல் ராணுவ தலைமைத் தளபதி யேயல் ஜமீர் தெரி வித்துள்ளார்.
   i. இதன் மூலம், காஸாவின் பாதி பகுதியை இஸ்ரேல் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் என்பதால், பாலஸ்தீனர்களிடையே இதற்கு கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது.
   ii. காஸாவில் கடந்த அக்டோபர் 10- ஆம் தேதி முதல் கடைப்பிடிக்கப்பட் டுவரும் போர் நிறுத்த ஒப்பந்தத்தின் கீழ், தெற்கே வரையறுக்கப்பட்டுள்ள மஞ்சள் கோட்டுக்கு அப்பால் இஸ் ரேல் படைகள் விலகியுள்ளன.
   iii. இந்த மஞ்சள் கோடு, காஸாவின் கிழக்கு பகுதியில் 1.5 முதல் 6.5 கி.மீ. வரை நீண்டு, காஸாவின் 53 சதவீத பகுதியை உள்ளடக்கியுள்ளது. அந்தப் பகுதியை தற்போது இஸ்ரேல் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது. இந்த மஞ்சள் கோட்டு எல்லைக்குள் காஸாவின் மிகப்பெரிய விவசாய நிலங்கள், எகிப்துடனான எல்லைக் கடவு ஆகியவையும் அடங்கும்.
   iv. டிரம்ப்பின் 20 அம்ச அமைதித்திட்டத்தில், இஸ்ரேல் படைகள் அந்தப் பகுதியை சர்வதேச பாதுகாப்புப் படைகளிடம் 'படிப் படியாக ஒப்படைக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இருந்தாலும், இஸ்ரேலும் தனது பாதுகாப்புக்காக மிகச் சிறிய காஸா பகுதியை உள்ளடக்கிய எல்லைக் கோட்டை வைத்திருக்க என்று அந்தத் திட்டம் அனுமதிக்கிறது. ஆனால், மஞ்சள் கோட்டுக்கு உள்பட்ட பகுதிகளை இஸ்ரேல் முழுமையாக விட்டுக்கொடுக்காது என்பதை ஜமீரின் தற்போதைய கூறுதிப்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

5. அமெரிக்காவின் அமைதி ஒப்பந்ததிட்டத்தின் படி ரஷியாவுக்கு எந்தப் பகுதியையும் விட்டுத் தர உக்ரைன் அதிபர் வொலோதிமீர் ஸெலென்ஸ்கி மறுப்பு தெரிவித்ததையடுத்து, புதிதாக ஓர் அமைதி திட்டத்தை உக்ரைன் உருவாக்கிவருகிறது.
   i. உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக அமெரிக்கா முன்வைத்த 28 அம்ச திட்டம் தற்போது 20 அம்ச திட்டமாக சுருக்கப்பட்டுள்ளதாக உக்ரைன் அதிபர் அலுவலக அதிகாரி ஒருவர் கூறினார்.
   ii. இந்தத் திட்டத்தில், டிரம்ப்பின் முந்தைய திட்டத்தில் இடம் பெற்றுள்ள ரஷியாவுக்கு ஆதரவான அம்சங்கள் இடம் பெற்றிருக்காது என்று அந்தச் செய்தி நிறுவனம் தெரிவித்தது.

6. 2026 உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் ஒவ்வொரு ஆட்டத்தின் முதல் மற்றும் 2-ஆம் பாதியில் 3 நிமிஷங்கள் 'டிரிங்க்ஸ்' இடைவேளை விடப்படும் என ஃபிஃபா அறிவித்தது.
   i. கடந்த ஆண்டு அமெரிக்காவில் நடைபெற்ற கிளப் உலகக் கோப்பை கால்பந்து போட்டியில், சில ஆட்டங்களின்போது வெப்பம் காரணமாக வீரர்கள் பாதிக்கப்பட்டனர். அதனடிப்படையில் இந்த முடிவை ஃபிஃபா தற்போது

மேற்கொண்டுள்ளது.

ii. 2026 உலகக்கோப்பை போட்டிக்கான ஃபிஃபா தலைமை அதிகாரி மனோலோ ஜுபிரியா, போட்டி ஒளிபரப்பு நிறுவனங்களின் பிரதிநி திகளுடனான கூட்டத்தின்போது இதை தெரிவித்தார்.

iii. 2026 உலகக்கோப்பை கால்பந்து போட்டி, அமெரிக்கா, கனடா, மெக்ஸிகோவில் ஜூன் 11 முதல் ஜூலை 19 வரை நடைபெறவுள்ளது.

7. சி-130ஜே சூப்பர் ஹெர்குலீஸ் கனரக ராணுவப் போக்குவரத்து விமானங்களை தயாரிப்பதற்கான கூட்டுத் தயாரிப்பு மையத்தை இந்தியாவில் அமைக்க, அமெரிக்காவின் பாதுகாப்பு உற்பத்தி நிறுவனமான லாக்ஹீட் மார்டின் திட்டமிட்டுள்ளது.

i. பல லட்சம் கோடி ரூபாய் மதிப்பில் சுமார் 80 ராணுவ போக்கு வரத்து விமானங்களை கொள்முதல் செய்ய இந்திய விமானப்படை திட்டமிட்டுள்ளது. அந்தக் கொள்முதலுக்கு பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படும் பாதுகாப்பு தளவாட கொள்முதல் கவுன்சில் (டி.ஏசி) அடுத்த சில வாரங்களில் ஒப்புதல் அளிக்க வாய்ப்புள்ளது.

ii. தற்போது இந்திய விமானப் படையிடம் 12 சி-130ஜே சூப்பர் ஹெர்குலீஸ் விமானங்கள் உள்ளன. இந்நிலையில் இந்தியாவிலும், பிற 20 நாடுகளிலும் நீண்ட காலமாக நம்பகமான முறையில் அந்த விமானங்கள் கடினமாக செயலாற்றுவதால், அந்த விமானங்களை தயாரிப்பது இந்திய விமானப்படைக்கு சிறப்பானதாக இருக்கும் என்று அந்த நிறுவனம் பரிந்துரைத்துள்ளது.

iii. சி-130ஜே சூப்பர் ஹெர்குலீஸ் கனரக ராணுவ போக்குவரத்து விமானத்தை தயாரிப்பதற்கான கூட்டுத் தயாரிப்பு மையத்தை இந்தியாவில் அமைக்க லாக்ஹீட் மார்டின் திட்டமிட்டுள்ளது. அமெரிக்காவுக்கு வெளியே தனது கூட்டுத் தயாரிப்பு நிறுவனத்தை அமைக்க முதல் நாடாக இந்தியாவிடம் லாக்ஹீட் மார்டின் வாக்குறுதி அளித்துள்ளது.

8. திருநெல்வேலியில் ரூ.56.60 கோடியில் கட்டப்பட்டுள்ள பொருநை அருங்காட்சியகத்தை டி.ச. 20- ஆம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்துவைத்து, அன்றைய தினம் 50,000 பேருக்கு நலத் திட்ட உதவிகளை வழங்குகிறார் என்று நகராட்சி நிர்வாகம் - குடி நீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

9. சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாத நீதிக்கு எதிராக பதவி நீக்க தீர்மான நோட்டீஸை மக்கள்வைத் தலைவரிடம் எதிர்க் கட்சி எம்.பி.க்கள் அளித்தனர்.

**1993** - பஞ்சாப்- ஹரியாணா உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி வி.ராமசுவாமிக்கு எதிரான தீர்மானம் மக்களவையில் முன்மொழியப்பட்டு மூன்றில் இரண்டு பங்கு வாக்கைப் பெறாததால் தோல்வியடைந்தது.